## நாகர்கோயில் தொகுதியில் மீனவர் குடியிருப்பு

*821வினு— திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோயில் தொகுதியில் உள்ள மணக்குடி, பள்ளம், புத்தன்துறை, கேசவன்புத்தன்துறை, பெரியக்காடு ஆகிய மீனவர் பகுதிகளில் உள்ள குடியிருப்புக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:— (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமாரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு கிராமங்களில்தான் மீனவர்களுக்கு வீடுகள் கட்டப் பட்டுள்ளன.—

(1) கேசவன்புத்தன்துறை .. 50 வீடுகள்.

(2) புத்தன்துறை .. 50 வீடுகள்.

இந்த வீடுகள் தமிழ்நாடு ஹரிஜன வீட்டு வசதிக் கழகம் மூலமாக கட்டப்பட்டு மீனவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மணக்குடி, பள்ளம், மற்றும் பெரியக்காடு ஆகிய கிராமங்களில் தகுதியான வீட்டு மனைகள் மற்றும் பாதை வசதிகள் முதலியன இருப்பின் அடுத்த ஆண்டில் இங்கு வீடு கட்டுதல் குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, கேசவன் புத்தன்துறை, புத்தன்துறை ஆகிய இடங்களில் வீடு கட்டியிருப்பதற்கு நன்றி. மற்றும், மணக்குடி, பள்ளம், பெரியக்காடு ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பு அற்று இருக்கிற காரணத்தால், அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக நிதி ஒதுக்கீட்டை அரசு ஏற்கனவே செய்து இருக்கிறது. அந்தக் கிராமங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு, நான் மூலக்கேள்விக்கு பதில் சொல்லும்போது குறிப்பிட்டதுபோல், அந்த இடங்களில் தகுதியான வீட்டுமனைகள் மற்றும் பாதை வசதிகள் செய்து தர கிராம மக்கள் ஒத்துழைப்புத் தருவார்களானல் கூடிய விரைவில் அங்கே வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1978 ஏப்ரல் 6]*

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்போது கடலோரப் பகுதியில் இருக்கும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. அதேபோல், உள்பகுதியில் இருக்கும் மீனவர்களும் வீடு இல்லாத நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு திட்டம் தீட்டியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பூம்புகார், வாணகிரி போன்ற இடங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் உள்நாட்டில் இருக்கும் மீனவர்களுக்கும் வீடுகள் கட்டித் தருவதற்கு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தில் இருக்கும் மீனவர்கள் பகுதி எவை எவை, அதைத் தொடர்ந்து இந்த புதிய அரசும் மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆட்சி காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆசிரியர்களுக்கு சீருடை.

*822 வினா— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. ஆனால் செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் சாதாரண ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் சீருடை வழங்கவும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு சீருடைப்படி அளிக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.